www.nunnarivu.com

நீதியின் நுண்ணறிவு

புலனாய்வு இதழ்

NEETHIYIN NUNNARIVU

மலர் : 6 Volume : 6 | இதழ் : 11 Issue : 11 | ஆகஸ்ட் : 2026 August : 2026 | தமிழ் மாத இதழ் Tamil Monthly Mgazine | விலை : ரூ.15/- Price : Rs. 15/-







சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் இலக்கியாவை கைது செய்து டிஸ்மிஸ் செய்யுமா?



அனைவரையும் அரவணைத்த முதல்வர் விஜய் அரசின் முதல் வெற்றி பட்ஜெட்



சென்னை பெருநகர காவல் ஆணையாளர் A.அமல்ராஜ் அவர்கள் சிறப்பாக பணியாற்றிய 21 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை நேரில் அழைத்து வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.



அலைபேசியை பயன்படுத்தாமல் பொதுமக்களை தவிக்கவிடும் 38 மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊழியர்கள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உங்கள்
அன்பும், ஆதரவும்
எங்கள் வாழ்வில்
என்றும் நிலைத்திருக்கும்...

உங்கள் நினைவுகள்
என்றும் எங்கள்
இதயங்களில்
நிலைத்திருக்கும்...

திரு.

எஸ். ஜெயபாண்டியன்

தோற்றம்: 18.10.1948 | மறைவு: 06.08.2025

நீங்கள் எங்களுடன் உடலாக இல்லை என்றாலும்,
உங்கள் நல்லலண்ணங்களும், ஆசீர்வாதங்களும்
எங்களை வழிநடத்திக் கொண்டே இருக்கும்.

நீதியின் நுண்ணறிவு பத்திரிகையின் இணை ஆசிரியர் கணேசபாண்டி அவர்களின் தந்தையின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நமது பத்திரிகை குழுமத்தின் சார்பாக ஐயாவை வணங்குகின்றோம்.

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU
புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
R.சிவக்குமார்

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய்,
G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி. S.P.
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துண கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் - குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.

முதன்மை நிருபர்கள்
R.இன்பசேகரன், R.சதீஷ்குமார்,
V.மாதவன்,

நிருபர்கள்
G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சஞ்சய்குமார், A.மதிமாறன்,
J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஜசக்,P.சாலமன்,
P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்,
தங்கபாண்டியன், ராமமூர்த்தி

சட்ட ஆலோசகர்கள்
R.வீரராகவன்.BSc., M.B.M., LL.B.,
K.M.S.செந்தில்குமார்.BSc., B.L.,
S.சரவணன்.M.Sc., B.L.,M.A.,

வடிவமைப்பு : மகாராஜா பிரிண்டர்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 42.

nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

ஆசிரியர் பக்கம்

எங்கே சென்றது அரசியல் நாகரிகம் ...?

17-வது சட்டமன்றப்பேரவையை ஏகோபித்த மக்களின் பேராதரவில் 2-ஆண்டு காலத்தில் ஆட்சியை பிடித்த தமிழகவெற்றிக்கழகம் அரசியல் வரலாற்றையே திரும்ப்பிப்போட்ட ஓர் அதிசய வரலாறு...!

75-ஆண்டுகளை கடந்த திமுக 52-ஆண்டுகளை கடந்த அதிமுக யாருமே எதிர்பாராதவாறு பெரும் சரிவை சந்தித்துள்ளதும் ஆச்சர்யமான ஒன்றுதான். எதிர்கட்சிகளின் மிகப்பெரிய கடமை ஆளும் கட்சியின் சரியான செயல்பாடுகளை முறையாக சபை நாகரிகம் குறையாமல் எதிர்த்து கேள்விகளை எழுப்பி தவறுகளை சுட்டிக்காட்டி போராட்டங்கள் தேவையென்ற பட்சத்தில் கையிலெடுக்கவேண்டும். ஆளும் கட்சியே திகைக்கும் அளவிற்கு திறமையாக கேள்விகளை முன்வைத்து கவனித்து வரும் மக்களின் பாராட்டை பெறவேண்டும்.

மக்களாட்சியில் ஒரு முதலமைச்சருக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் வழங்கவேண்டிய மரியாதையை துளிகூட குறையாமல் வழங்கவேண்டியது சட்டமன்ற அனைத்து உறுப்பினர்களின் கடமை. அதேப்போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதையை முதலமைச்சரும் திரும்பத்தருவது உத்தமம்.

சமீபத்தில், அரசியல் கட்சி பொதுக்கூட்டத்தில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் திரு.மார்கண்டேயன் ஆகிய இருவரும் முதல்வர் திரு.விஜயை அவதூறு, மிரட்டலாகவும் பேசி சர்ச்சைகளை கிளப்பிவிட்ட சலசலப்பு முடிந்தவுடன் திமுக-வின் எதிர் கட்சித்தலைவர் திரு.உதயநிதி அவர்களும் ஆபாசம் கலந்து ஓர் சொல்லை பேசியதாக சட்ட நடவடிக்கையும் மேற்கொண்டதை செய்தியாய் பரவி விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளது நம் அரசியல் நாகரீகம் எங்கே செல்கிறது என்ற ஒரு ஐயப்பாட்டை உண்டாக்குகிறது...?!, திமுக ஓர் நீண்ட அரசியல் வரலாற்றை பதிவுகளை நிகழ்த்திய கட்சி என்பதில் எவரும் மாற்றுக்கருத்திருக்க முடியாது. ஒவ்வொரு நாளும் எதிர்கட்சி என்ற முறையில் காழ்புணர்ச்சி கலந்த வன்மத்தை வெளிப்படுத்துகிறதா..?! என்ற ஆதங்கத்தை சில பொது மக்களிடையே யோசிக்க வைத்துள்ளதை மறைக்க முடியாது. எந்த ஒரு அரசியல் சார்ந்த எதிர் கருத்தாகயிருந்தாலும் முறையான போராட்டங்களின் மூலமும் சட்டப்பூர்வமான முன்னெடுப்புகளின் வழியாக தங்களுக்கான கொள்கை வழியில் எதிர்கொண்டால்,தமிழகத்தில் அரசியல் இன்னும் சிறப்பாக அமையப்பெறுவதுடன்,

மக்களின் ஆதரவும் எதிர்கட்சிகள் மீது வைத்துள்ள நம்பிக்கையும் மேலோங்கி புதிய இளைஞர்களுக்கு அரசியல் ஆர்வம் அதிகரிக்க கூடும்--



ஆசிரியர்
R.சிவக்குமார்

திருச்சி மாவட்ட காவல்துறையில் சிறப்பு நுண்ணறிவு பணிக்கான சிறந்த காவல் பதக்கம் பெற்றார்,





திருச்சி மாவட்ட காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வரும் திரு. ரகுராமன் அவர்கள் சமயபுரம் பகுதியில் சுமார் 10 கிலோ தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வடமாநிலங்களுக்கு சென்று 26 நாட்கள் முகாமிட்டு குற்றவாளிகளை கைது செய்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை மீட்டு காவல்துறைக்கு பெருமை சேர்த்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் சிறப்பு நுண்ணறிவு மற்றும் சிறப்பு செயலாக்கத்திற்கான சிறந்த பணிக்கான காவல் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிலிண்டர் வெடித்து 3 பேர் பலி குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவிப்பு!

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் அருகே உள்ள உஞ்சியவிடுதி சின்ன அம்மங்குடி கிராமத்தில் ஏற்பட்ட தீவிபத்தில், சிலிண்டர் வெடித்துப் பலத்த காயமடைந்த பழனிவேல், காசிநாதன், வேம்பையன் ஆகிய 3 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள முதலமைச்சர் ச. ஜோசப் விஜய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவிகளை அறிவித்துள்ளார்: உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு: தலா ₹3 லட்சம், கடும் காயமடைந்த 5 பேருக்கு: தலா ₹1 லட்சம், லேசான காயமடைந்தவருக்கு: ₹50,000 பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



வேளாண்மைத் துறை பட்ஜெட்டை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து தஞ்சை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் ஏனாதி சி.மதன் வாழ்த்துகளைத் தெரிவித்தார்



தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், மாண்புமிகு வேளாண்மை மற்றும் விவசாய நலன் துறை அமைச்சர் திரு. வினோத் ரவி அவர்கள், தமிழக அரசின் 2026 2027 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை பட்ஜெட்டை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, தஞ்சை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் ஏனாதி சி.மதன் அவர்கள் 08.07.2026 அன்று நேரில் சந்தித்து மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார். வேளாண் பெருமக்களின் முன்னேற்றத்திற்கும், தமிழ்நாட்டின் விவசாய வளர்ச்சிக்கும் இப்புதிய பட்ஜெட் பயனளிக்கட்டும் என வாழ்த்துகிறோம்.

போதைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் மாத்திரைகளை விற்பனை செய்த மருத்துவமனையின் தற்காலிக பணியாளர் சிறையில் அடைப்பு...





புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் இருந்து தூக்க மாத்திரைகளை திருடி அதனை போதைக்காக இளைஞர்களிடம் விற்பனை செய்த சம்பவத்தில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்தக தற்காலிக பணியாளர் பிரேம்குமார் உள்ளிட்ட இருவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் உயிரை காக்க வேண்டிய மருத்துவக் கல்லூரியில் மருந்து மாத்திரைகளை விநியோகம் செய்யும் பணியில் நிரந்தரப் பணியாளரை நியமிக்காமல் மருத்துவக் கல்லூரி முதல்வர் தன்னிச்சையாக எவ்வாறு தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்தார்..? என்ற கேள்வியும் சம்பந்தப்பட்ட நாட்களில் நோயாளிகளுக்கு வழங்க வேண்டிய எவ்வளவு மருந்து மாத்திரைகள் இது போல் வெளியில் திருட்டுத்தனமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது..? என்ற கேள்வியும் பொதுமக்கள் மத்தியில் எழுந்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தமிழக அரசு உடனடியாக விசாரணை குழு அமைத்து முறைகேட்டில் ஈடுபட்ட மருத்துவ கல்லூரி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை. இவ்வளவு பெரிய சம்பவத்தை புதுக்கோட்டை மாவட்ட காவல்துறையினரும் மருத்துவ கல்லூரி நிர்வாகமும் மூடி மறைத்தது இன்னும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை மாநகர காவல்துறை காவல் துணை ஆணையர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.





கோவை மாநகர காவல்துறை வடக்கு காவல் துணை ஆணையர் திரு.P. தங்கதுரை, IPS., அவர்கள் மற்றும் தெற்கு காவல் துணை ஆணையர் திரு.G. கார்த்திகேயன் அவர்கள் தங்களது மெச்சத்தகுந்த காவல் பணிக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

திருப்பூரில் அரை கிலோ போலி நகைகளை அடகு வைத்து ₹52 லட்சம் மோசடி. வங்கி மேலாளர் உட்பட நான்கு பேர் கைது..

திருப்பூர் குமரன் ரோட்டில் உள்ள தனியார் வங்கியில் முறைகேடு நடந்துள்ளது. இந்த முறைகேட்டில் காப்பர் (செம்பு) நகைகளுக்கு மிக நேர்த்தியாக தங்க முலாம் பூசப்பட்டு, அவை உண்மையான தங்க நகைகள் போல மாற்றப்பட்டன.

அரை கிலோவிற்கும் அதிகமான போலி நகைகளை நிறுவனத்தில் அடகு வைத்து, அதற்கு ஈடாக ₹52 லட்சம் வரை கடன் பெற்று மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடியில் ஒரு பெண் உட்பட மோசடிக்கு அந்த நிறுவனத்தின் கிளை மேலாளர், துணை மேலாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் (Gold Appraiser) ஆகியோர் கூட்டுச் சேர்ந்து, போலி நகைகளை அசல் எனச் சான்றளித்து பணத்தைப் பெற்றுள்ளனர். நிறுவனத்தில் நடத்தப்பட்ட வழக்கமான உள் தணிக்கையின் (Internal Audit) போது, அங்கு வைக்கப்பட்டிருந்த நகைகள் போலி என்பதும், வாடிக்கையாளர்களின் கணக்குகளில் குளறுபடி இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.



இந்த கூட்டுச் சதியில் ஈடுபட்டதாகக் கூறி காவல் துறையினர் ஒரு பெண் உட்பட நான்கு பேரை அதிரடியாகக் கைது செய்துள்ளனர். வங்கியின் கிளை மேலாளர், வங்கியின் உதவி / துணை மேலாளர், நகை மதிப்பீட்டாளர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுத்தனம் செய்யும் போது ஆடிட்டிங்கில் கண்டுபிடித்து விடுவார்கள் என்பது இவர்களுக்கு தெரியாதா? தெரிந்தும் வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து இந்த வேலையை செய்தார்களா? என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த விசயம்..

என்னத்த சொல்ல நல்ல சம்பளம் வாங்கினாலும் சிலருக்கு குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். இதை பார்க்கும் போது பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்ற பழமொழி தான் ஞாபகத்துக்கு வருகிறது..

முதியோர்களுக்கான முத்தான திட்டங்கள்...



60 வயது நிரம்பிய மூத்த குடிமக்களுக்கு மகிழ்ச்சியான முத்தான அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா என்ற திட்டம் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு கண்ணாடி, வாக்கிங் ஸ்டிக், காது கேட்கும் கருவி, பல்செட் போன்ற உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் மத்திய அரசு அவர்களுக்கு உதவிதொகை வழங்கும் வகையில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அவை இ-ஷ்ரம் கார்டு திட்டம் ஆகும். இந்த இ-ஷ்ரம் அட்டை வைத்திருந்தால் இயற்கை பேரிடர் உள்ளிட்ட அவசர காலங்களில் அரசு வழங்கும் நிதியுதவிகள் நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தப்படும் வகையில் இந்தத் திட்டம் உதவுகிறது. மேலும் ரூ.2 லட்சம் வரை காப்பீடு கிடைக்கும். இ-ஷ்ரம் அட்டை வைத்திருப்பவர்கள், பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PM-SYM) ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து மாதாந்திர பங்களிப்புத் தொகையை செலுத்தினால், 60 வயதுக்கு பிறகு மாதம் ரூ.3,000 ஓய்வூதியம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ரேஷன் கடைகளில் தாயுமானவர் திட்டத்தை 60 வயதிலிருந்து விரிவாக்கம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறியதாவது: முதியோர், மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டம் கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தவெக அரசும் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

தற்போது 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் என சுமார் 20 லட்சம் பேருக்கு இத்திட்டத்தின்கீழ் வீடு தேடி ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், முதல்வர் விஜய் அறிவுறுத்தலின்படி, 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், கைம்பெண்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மகளிர் உரிமைத் தொகை பெற்று வரும் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், புதிய மறு சீரமைப்பு நடவடிக்கையின் கீழ் முதியோர் உதவித் தொகை என்ற திட்டத்திற்கு மாற்றப்படுவார்கள். இதனால் இதுவரையில் ரூ.1,000 பெற்று வந்த அவர்களுக்கு மாதா மாதம் ரூ.3,000 வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

பிரதம மந்திரி ஷ்ராம் யோகி மாந்தன் (Pradhan Mantri Shram Yogi Maandhan) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது முறைசாரா தொழிலாளர்களுக்கான பென்ஷன் திட்டமாகும். இதில் 18 முதல் 40 வயதுக்குள் உள்ளவர்கள் இணைந்து மாதச்சந்தா செலுத்தினால், 60 வயதிற்கு மேல் மாதம் ரூ.3,000 பென்ஷன் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்ட காவல்துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தமிழ்நாடு முதலமைச்சர் மெச்சத்தகுந்த பணிக்கான காவல் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





திருச்சி மாவட்ட காவல்துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வரும் திரு.T.மதியழகன் அவர்கள் சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவில் பணியாற்றிய போது போலி கடவுச்சீட்டு (PASSPORT) வைத்திருந்தவர்களை கைது செய்து அதன் மூலம் அமெரிக்க தூதரக அதிகாரியின் பாராட்டு பெற்றமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மெச்சத்தகுந்த பணிக்கான காவல் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த பள்ளி மாணவி பா.பாலஜனனி





திருவாரூர் நல்லினம் ராஜராணி மஹாலில் தமிழ்நாடு அளவில் 02.08.2026 அன்று நடைபெற்ற கராத்தே போட்டியில் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகா நடுவிகுறிச்சி அரசு ஆதி திராவிடர் உயர்நிலைப்பள்ளி பள்ளி மாணவி செல்வி பா.பாலஜனனி 12வயது பிரிவுக்கான கட்டா போட்டியில் முதலாவது இடத்தினையும், குழு கட்டா போட்டியில் முதலிடத்தினையும் சண்டை போட்டியில் இரண்டாவது இடத்தினையும் பெற்று தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் A.அமல்ராஜ் அவர்கள், காவல் நிலையங்களில் புலன் விசாரணையில் இருந்த வழக்குகளை இறுதி அறிக்கை தாக்கல் செய்து சிறப்பாக பணியாற்றிய 21 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை நேரில் அழைத்து வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.




சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ், இ.கா.ப அவர்கள், சென்னை பெருநகர காவலில் பணிபுரிந்து வரும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை ஊக்குவிக்கும் விதமாக, சிறப்பாக பணிபுரிந்து வரும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை நேரில் அழைத்து வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டி வருகிறார்.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள், சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட காவல் நிலையங்களில் பதிவான வழக்குகளில் புலன் விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்து வழக்குகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டதன் பேரில், H-8 திருவொற்றியூர், T-4 மதுரவாயல் மற்றும் P-6 கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் சிறப்பு கவனம் செலுத்தி, கடந்த 2026-ஜூலை மாதத்தில் தங்களது காவல் நிலையங்களில் புலன் விசாரணையில் நிலுவையிலிருந்த அதிகப்படியான வழக்குகளை விசாரணைக்கு எடுத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து சிறப்பாக பணியாற்றியுள்ளனர்.

மேற்படி காவல் நிலைய புலன் விசாரணையில் இருந்த வழக்குகளில் சிறப்பு கவனம் செலுத்தி சிறப்பாக பணியாற்றிய H-8 திருவொற்றியூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.R.அலெக்ஸ், தலைமைக் காவலர்கள் N.பாலசுப்பிரமணியன், (HC 25863), C.கிருஷ்ணவேணி, (WHC 37336), A.சூர்ய கிருஷ்ணன், (HC 62977), காவலர்கள் M.நிவேதா, (WPC 52529), S.சிவ ஈஸ்வரமூர்த்தி (PC 63612), T-4 மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் திரு.A.ஜெயராம், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சுரேஷ்பாபு, (SSI 62764), தலைமைக் காவலர் T.ஜெயந்தி, முதல்நிலை காவலர்கள் B.முரளி, (Gr.I. 53299), I.சங்கர் குமார், (Gr.I.65035), காவலர்கள் S.சங்கீதா, (WPC 59415), P.சுகன்யா (WPC 52856) மற்றும் P-6 கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.D.ரஜினிகாந்த், தலைமைக் காவலர்கள் K.வேதவள்ளி, (WHC 33245), V.சரளாதேவி, (WHC 28945), J.அரவிந்த்குமார் (HC 31068), திரு.V.பிரகாஷ் (HC 30027), முதல்நிலை காவலர் M.சதீஷ்குமார் (Gr.I.62249), காவலர்கள் P.விக்னேஷ் (PC 62300) மற்றும் P.வெற்றிஅரசு (PC 61091) என மொத்தம் 3 காவல் ஆய்வாளர்கள், 1 சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் 17 காவல் ஆளிநர்கள் என 21 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ், இ.கா.ப., அவர்கள் (04.08.2026) அன்று நேரில் அழைத்து வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

பொதுமக்கள் தரும் எந்த ஒரு மனுவும் 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருக்கக்கூடாது.

துறை செயலர்களுக்கு அரசு உத்தரவு...



பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும், உரிய முறையில் தீர்வு காணப்பட வேண்டும். எந்த மனுவும், 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருக்கக்கூடாது; தங்களது துறை சார்ந்த முக்கிய விவகாரங்கள் குறித்து, அமைச்சர்களுக்கு அவ்வப்போது தகவல்கள் வழங்க வேண்டும்' என, அனைத்து துறை செயலர்கள் மற்றும் துறைகளின் தலைவர்களுக்கு, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசின் உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக, அனைத்து துறை செயலர்களுடன், தலைமை செயலர் சாய்குமார் சமீபத்தில் ஆய்வு கூட்டம் நடத்தினார். அதில்,பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அதன் விபரம்: பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும் உரிய முறையில் தீர்வு காண வேண்டும். மனுக்களின் தீர்வு நிலை குறித்து, துறை தலைவர்கள் வாரம்தோறும் ஆய்வு செய்ய வேண்டும். எந்த மனுவும், 30 நாட்களுக்கு மேல் நிலுவையில் இருக்கக்கூடாது.

ஏற்கனவே, அரசால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, துறை தலைவர்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்வதுடன், ஆய்வு அறிக்கைகளை உடனுக்குடன் அனுப்ப வேண்டும்.

கண்காணிப்பு அதிகாரிகள் மாதம்தோறும் களப்பணிகளை மேற்கொண்டு, தங்களது அறிக்கைகளை, பொதுத்துறை வாயிலாக, தலைமை செயலருக்கு அனுப்ப வேண்டும். அனைத்து அரசாணைகளும் எந்தவித தாமதமும் இன்றி, சம்பந்தப்பட்ட துறைகளின் இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

கவர்னர் உரை அறிவிப்புகளுக்கான அரசாணைகள் உடனே வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு துறை தலைவரும், 'உங்கள் அரசை தெரிந்து கொள்ளுங்கள்' திட்டத்திற்காக தகவல் தொழில்நுட்ப துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட, ஒரு தொடர்பு அலுவலரை நியமிக்க வேண்டும்.

'எல் நினோ' என்ற கால நிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய வறட்சி நிலையை எதிர்கொள்ள தேவையான, அனைத்து முன் ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இது தொடர்பாக, மாவட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

மத்திய அரசிடம் இருந்து பெறப்பட வேண்டிய மானியங்கள் மற்றும் நிலுவை தொகைகளை பெறுவதற்கான நடவடிக்கைகளை, செயலர்கள் மற்றும் துறை தலைவர்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். துறை தலைவர்கள், செயலர்கள் தங்களது துறை சார்ந்த முக்கிய விவகாரங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு, அவ்வப்போது தகவல்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக, அந்த உயரதிகாரி கூறினார்.

தஞ்சாவூர் மாவட்ட காவல்துறையினருக்கு முதலமைச்சர் விருது



தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த காவல் அதிகாரிகளின் மெச்சத் தகுந்த பணிக்காக திரு. வீரபாண்டியன் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருமதி. கலை கண்ணகி விரல் ரேகை பதிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திரு. இளங்கோவன் ஜென்னிங்ஸ், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர், திருமதி. சந்திரா காவல் ஆய்வாளர், திருமதி, புவனேஸ்வரி காவல் ஆய்வாளர், திரு. வெங்கடேசன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

ராமாபுரம் பகுதியில் உடைந்த கண்ணாடி பாட்டிலை காட்டி மிரட்டி செல்போன் பறித்துச் சென்ற வழக்கில் ஒருவர் கைது. ஒரு இளஞ்சிறார் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர். செல்போன் மீட்பு.

சென்னை, ராமாபுரம், சுந்தரி கார்டன் பகுதியை சேர்ந்த பிரேம்குமார், வ/51, என்பவர் கடந்த 02.08.2026 அன்று இரவு வீட்டினருகே நடைபயிற்சி மேற்கொண்டிருந்தபோது, நம்பர் பிளேட் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்த 2 நபர்கள் பிரேம்குமாரை வழிமறித்து உடைந்த கண்ணாடி பாட்டிலை காட்டி மிரட்டி அவர் வைத்திருந்த சாம்சங் செல்போனை பறித்துக் கொண்டு மிரட்டி சென்றதாகவும், தனது செல்போனை பறித்துச் சென்ற நபர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து தனது செல்போனை மீட்டு தரும்படியும், பிரேம்குமார் என்பவர் R-11 ராமாபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். R-11 ராமாபுரம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி தீபக், வ/21, பள்ளிப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை (03.08.2026) அன்று கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர். இவர்களிடமிருந்து புகார்தாரரின் சாம்சங் செல்போன் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.


Deepak - R-11 p.s. Accused

கைது செய்யப்பட்ட எதிரி தீபக் விசாரணைக்குப் பின்னர், (03.08.2026) அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார். இளஞ்சிறார், சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கோத்தகிரி நகராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி நகராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முதல் பேருந்து நிலையம் வரை புதிய தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மாநகர காவல் ஆணையர் Dr.N.கண்ணன் IPS., அவர்கள் L Police Store திறந்து வைத்தார்.



கோவை மாநகர ஆயுதப்படை வளாகத்தில் கோவை மாவட்ட ஆயுதப்படை காவலர் குடும்ப நலத்தொழில் கூட்டுறவு சங்கம் சார்பில் c - 03.08.2026 அன்று கோவை மாநகர காவல் ஆணையர் **Dr.N.**கண்ணன் **IPS.**, அவர்கள் திறந்து வைத்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட அலைபேசியை பயன்படுத்தாமல் பொதுமக்களை தவிக்கவிடும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊழியர்கள். முதல்வர் / தலைமை செயலாளர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க கோரிக்கை



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு அலைபேசி எண் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களை எளிதாக அணுகும் வகையில் இந்த அலைபேசி எண் உள்ளது. ஆனால் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் யாரும் இந்த அலைபேசி எண்ணை பயன்படுத்துவதில்லை

முதலமைச்சர் / தலைமை செயலாளர் உள்ளிட்ட முதன்மை அதிகாரிகள் இதில் உரிய கவனம் கொண்டு உடனடியாக 38 மாவட்ட ஆட்சியர்களும் இந்த அலைபேசி எண்ணை அவர்கள் எடுக்க முடியாவிட்டாலும் அவர்களுடைய உதவியாளர்கள் ஐந்து பேர் இருப்பார்கள், அவர்களாவது எடுத்து பொதுமக்களின் குறைகளை கேட்கவும், பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு உரிய பதில் அளித்து அவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க உத்தரவு இடவேண்டும்

மாவட்ட ஆட்சி தலைமை சரியாக இருந்தால் தான் அதற்கு கீழ் இயங்கும் கோட்டாட்சியர், வட்டாட்சியர் போன்ற அலுவலகங்கள் முறையாக இயங்கும். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு என உள்ள கீழ்கண்ட +91 94454 56000 மற்றும் +91 94450 07861 என்ற இரண்டு அலைபேசி எண்களும் நீண்ட நாள்களாக பயன்படுத்தாமல் பொதுமக்களுக்கு எந்த உபயோகமும் இல்லாமல் உள்ளது. குறிப்பாக தாம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக மக்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் நிலையே உள்ளது. 'இன்று போய் நாளை வா' என்ற வார்த்தையே அந்த அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும் எப்பொழுதும் கேட்கிறது. அங்கு கோட்டாட்சியராக இருந்த முரளி அவருடைய நேர்முக உதவியாளராக இருந்த ஸ்ரீதர் இருவரும் அவர்களுடைய பாக்கெட்டை நிரப்புபவர்களுக்கு மட்டுமே வேலை செய்து வருகின்றனர். தற்போது கோட்டாட்சியர் நேர்முக உதவியாளராக புதிதாக வந்திருக்கும் திருமதி ராதா அவர்கள் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு முறையாக பதில் அளித்து அவர்களுடைய கோப்புகள் யாரிடம் இருக்கின்றது என்று விசாரித்து பதில் அளிக்கிறார்கள். இதுபோல் இதற்கு முன்னால் இருந்த நேர்முக உதவியாளர் ஸ்ரீதர் வேலை செய்திருந்தால் கடந்த நான்கு ஆண்டுகளாக கோப்புகள் நிலுவையில் இருந்திருக்காது.

தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில்





பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வரும் போது அங்கு இடைத்தரகர்களின் ஆதிக்கமே உள்ளது பொது மக்கள் நேரடியாக தங்கள் குறைகளை உரிய அதிகாரிகளை நேரில் சந்தித்து முறையிட முடியவில்லை இடைத்தரகர்கள் பணம் பறிப்பதிலேயே குறியாக உள்ளனர் எனவே தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திலும் லஞ்ச ஒழிப்பு துறையினரின் சோதனை நடைபெற வேண்டும் என்று பொதுமக்கள் அனைவரும் கோரிக்கை வைக்கின்றனர். பணியாளர்கள் யாரும் உரிய நேரத்தில் பணிக்கு வருவது இல்லை. இது குறித்து கேள்வி கேட்கும் பொதுமக்களின் கோப்புகளை வேண்டும் என்றே கிடப்பில் போட்டுவிடுகின்றனர்.

கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட பல பதவிகளில் உள்ளவர்கள் தங்களின் சொந்த பயன்பாட்டிற்காக தனிப்பட்ட சொந்த எண்களை வைத்துள்ளனர். ஆனால் அரசு ஆணையின்படி அவர்கள் தங்களின் சொந்த பயன்பாட்டு அலைபேசி எண்களை அலுவலகத்தில் கரும்பலகையில் எழுதி வைத்து, பொதுமக்களின் பார்வையில் படும்படி தங்களின் சொந்த எண்களை தெரிவிக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. தங்களின் சொந்த பயன்பாட்டு அலைபேசி எண்களையே பொதுமக்களுக்கு வெளிப்படுத்தி குறைகளை தீர்த்து வைக்க உத்தரவிடும் அரசு, தமிழக அரசு வழங்கிய இலவச தொலைபேசி எண்கள் பயன்படுத்தாமல் இருப்பது குறித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை

இந்த பிரச்சினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துறை அரசு அலுவலகங்களிலும் உள்ளது. தமிழக அரசு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஆக்கப்பூர்வமாக அனைத்து துறை சார்ந்த பணிகளுக்கும் அலைபேசி மற்றும் தொலைபேசி எண்கள் வழங்கி உள்ளது. ஆனால் ஒரு சில இடங்களை தவிர பெரும்பாலான அலுவலகங்களில் இந்த எண்களை பயன்படுத்தாமல் உள்ளனர். இதனால் பொதுமக்களின் கோபம் ஆளும் அரசுகளின் மீது விழுகிறது. எனவே இந்த முக்கிய பிரச்சினையை முதல்வர், தலைமை செயலாளர் உள்ளிட்ட முதன்மை அதிகாரிகள் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

விவாகரத்து வழக்கை வாபஸ் பெற்றார் சங்கீதா. வழக்கு முடித்து வைக்கப்பட்டது



முதல்வர் விஜய் – சங்கீதா இடையிலான விவாகரத்து வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது காணொளி மூலம் நடைபெற்ற விசாரணையின் போது, லண்டனில் இருந்தவாறு சங்கீதா காணொளி காட்சி வாயிலாக இணைந்தார். நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது சங்கீதா தனது வழக்கை வாபஸ் பெறுவதாக அறிவித்தார் 'தான் அளித்த விவாகரத்து மனுவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக' சங்கீதா அறிவித்தார். இதையடுத்து, விஜய் – சங்கீதா இடையிலான இந்த வழக்கை முழுமையாக முடித்து வைப்பதாகச் செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றம் அறிவித்துள்ளது!

நம்மாழ்வாரின் 88வது பிறந்த நாளை முன்னிட்டு இயற்கை விவசாயிகளுக்கு விருது வழங்கல்







நமது மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளை சார்பாக, நம்மாழ்வாரின் 88வது பிறந்த நாளை முன்னிட்டு நேர்மையான இயற்கை விவசாயிகளை கௌரவிக்கும் நோக்கில் மண்ணுக்கும் மக்களுக்கும் விருது வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 11 இயற்கை விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதும், தலா ரூ.5,000 ரொக்கப் பரிசும் வழங்கி அவர்களின் அர்ப்பணிப்பை கௌரவித்தோம். இது மிகுந்த மனநிறைவை அளித்த தருணமாகும்.

கடந்த ஆண்டு மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 11 விவசாயிகளை கௌரவித்தோம். மக்களின் அன்பும் விவசாயிகளின் மகிழ்ச்சியும் இந்த ஆண்டும் நிகழ்வை மேலும் சிறப்பாக நடத்த ஊக்கமளித்தது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஊக்குவித்த தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. விஜய் சரவணன், வேளாண் செம்மல் திரு. கோ. சித்தர் மற்றும் நம்மாழ்வாரின் அண்ணன் மகன் திரு. பூமிநாதன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

இயற்கை விவசாயம் என்பது ஒரு முறை அல்ல; அது மண்ணையும் மனித ஆரோக்கியத்தையும் வருங்காலத்தையும் காக்கும் வாழ்க்கை முறை. இளைஞர்கள் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

மண்ணுக்கும் மக்களுக்கும் அறக்கட்டளையின் நோக்கம் இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் விவசாயத்தை பாதுகாப்பதாகும். மரக்கன்றுகள் நடுதல், நீர்நிலைகள் பாதுகாப்பு, இயற்கை விவசாய ஊக்குவிப்பு மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு ஆகிய பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம்.

விவசாயிகளை பாதுகாப்பதும், இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்பதும் நம் அனைவரின் பொறுப்பு. அதிக மரங்கள் நடுவோம், நீர்நிலைகளை காப்போம், சுற்றுச்சூழலை பாதுகாப்போம்.

இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த உதவிய அனைத்து மாவட்ட நிர்வாகிகள், தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பங்கேற்ற அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

மண்ணைக் காப்போம் விவசாயியைக் போற்றுவோம் இயற்கையைக் காப்போம் இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்போம் அதுவே மனிதகுலத்தைக் காப்போம். மண்ணுக்கும் மக்களுக்கும் சேவையே நமது இலக்கு!



மயிலாடுதுறையில் காவல் ஆய்வாளர் திரு.சிவாசெந்தில்குமார், உளவுத்துறை மற்றும் சிறப்பு நடவடிக்கைகளுக்கான உளவுப்பணி ஆகியவற்றில் சிறந்து விளங்கியதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் விருது. மாண்புமிகு திரு ச. ஜாசப் விஜய் அவர்களிடமிருந்து விருது பெற்றுள்ளார். நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழின் சார்பாக இவரின் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

புனித தோமையர் மலை அருகே BMW காரை வழிமறித்து ஓட்டுநரை தாக்கி காரை கடத்திச் சென்ற வழக்கில் 4 நபர்கள் கைது. BMW கார் உட்பட 2 கார்கள் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல்.

சென்னை, அண்ணா நகரில் வசித்து வரும் அபிகாஷ், வ/21 என்பவரின் சித்தப்பா மேகநாதன் என்பவர் கொளத்தூரில் கார் மெக்கானிக் கடை நடத்தி வருவதாகவும், மேகநாதனின் கடைக்கு வந்து பழுது முடித்த ஒரு வாடிக்கையாளரின் **BMW** காரை நங்கநல்லூர் மெட்ரோ அருகே வாடிக்கையாளரிடம் ஒப்படைக்கும்படி மேகநாதன் 04.08.2026 அன்று இரவு அபிகாஷிடம் மேற்படி காரை கொடுத்து அனுப்பியதாகவும், அபிகாஷ் மேற்படி காரை ஓட்டிக் கொண்டு, நங்கநல்லூர் அருகே சென்றபோது, 4 நபர்கள் மேற்படி காரை வழிமறித்து நிறுத்தி, அபிகாஷை தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கி அவரை காரிலிருந்து இறக்கிவிட்டு, 4 நபர்களும் மேற்படி **BMW** காரையும், அவர்கள் வந்த காரையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றதாகவும், மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அபிகாஷ் என்பவர் **S-1** புனித தோமையர்மலை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

S-1 புனித தோமையர்மலை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி காரை கடத்திச் சென்ற எதிரிகள் 1.கார்த்திக், வ/41, அம்பாள் நகர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம், 2.சங்கர், வ/51, பர்மா காலனி, நந்தம்பாக்கம், சென்னை, 3.பிரசாத், வ/40, கணபதிபுரம் காலனி, புனித தோமையர் மலை, இவரது தம்பி 4.ராமச்சந்திரன், வ/38 ஆகிய 4 நபர்களை (05.08.2026) அன்று கைது செய்தனர். இவர்களிடமிருந்து புகார்தாரரின் **BMW** கார் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய **Swift** கார் மற்றும் ஐபோன் உட்பட 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.



விசாரணையில் எதிரி கார்த்திக் பழைய கார்கள் வாங்கி விற்கும் அலுவலகம் நடத்தி வருவதாகவும், கார்த்திக்கும் மேற்படி **BMW** காரின் உரிமையாளருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பிரச்சனை இருந்த நிலையில், கார்த்திக் தனது நண்பர்களுடன் சேர்ந்து மேற்படி காரை கடத்திச் சென்றது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 4 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

லஞ்சம் வாங்கிய பணத்தால் அதிகார போதையில் மிதந்த சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் இலக்கியாவை கைது செய்து டிஸ்மிஸ் செய்யுமா? முதல்வர் விஜய் அரசு. லஞ்சப் பணத்தை வாங்கி கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை பாயுமா?





சோழிங்கநல்லூர் வட்டாட்சியராகப் பணியாற்றியவர் இலக்கியா. இவர் எந்தவித குற்ற உணர்வும் இல்லாமல் அரசு பதவி என்பது லஞ்சம் வாங்க கொடுத்த லைசென்ஸ் என்பது போல் கருதி பொதுமக்களை அலைக்கழித்து, பணக்கட்டுகளுடன் வருபவர்களுக்கு ராஜ மரியாதை அளித்து வந்தவர். தன்னுடைய வட்டாட்சியர் பதவியை துஷ்பிரயோகம் செய்து கோடிக்கணக்கில் லஞ்சம் பெற்று ஊழல் செய்து வந்தார்

இத்தகைய ஊழல் ராணியாக வலம் வந்த வட்டாட்சியர் இலக்கியா மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அவரது வீட்டிலும் அலுவலகத்திலும் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ஏராளமான ரொக்கம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது

சோதனை விவரங்களும் நடவடிக்கையும்

ஜூலை 2026-ல் தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்புத் துறை அதிரடி சோதனை ஒன்றை நடத்தியது. இதில் வட்டாட்சியர் இலக்கியா மற்றும் அவருடன் தொடர்புடையவர்களிடம் இருந்து கணக்கில் வராத பல லட்ச ரூபாய் ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து இலக்கியா சோழிங்கநல்லூர் வட்டாட்சியராக பணியாற்றியபோது ஏற்பட்ட புகார்களின் அடிப்படையில், நெடுஞ்சாலைத்துறை நில எடுப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டார்

முன்னாள் சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் (தாசில்தார்) இலக்கியா மற்றும் அவரது அலுவலக ஊழியர்கள் மீது முக்கியமான பல புகார்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு உள்ளது

இலக்கியா தன்னிடம் வரும் முக்கிய கோப்புகளான வாரிசுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் வழங்குதல், பட்டா மாற்றம் மற்றும் நிலம் தொடர்பான முக்கிய கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்காமல் வேண்டுமென்றே நிலுவையில் வைத்ததாக பொதுமக்கள் ஆலந்தூர் லஞ்ச ஒழிப்புத் துறையிடம் தொடர்ந்து புகார்கள் அளித்தனர்

இலக்கியா பொதுமக்களிடம் தான் நேரடியாக பணம் வாங்கினால் மாட்டிக்கொள்வோம் என்பதால், தங்களுக்குத் தெரிந்த இடைத்தரகர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் 'ஜி-பே' (GPay) போன்ற டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை செயலிகள் மூலம் லஞ்சப் பணம் பெற்று வந்துள்ளார். துணை வட்டாட்சியர் சபரீசன், டிரைவர் தேவா, நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் சுஹைல் ஆகியோர் இலக்கியாவிற்கு பணம் பெற்று தரும் முக்கிய புள்ளிகளாக வலம் வந்தனர். வட்ட துணை ஆய்வாளர் சுஹைல் தற்போது வரை பட்டா மாறுதலுக்கு பணம் லஞ்சம் வாங்கிக்கொண்டு மட்டுமே பணிசெய்கிறார். பணம் கொடுக்காதவருக்கு இடத்தை நேரில் வந்து ஆய்வு செய்வதில்லை அவர்கள் போன் செய்தால் போன் எடுப்பதில்லை அலுவலகத்திற்கு வந்தால் அவரை பார்க்க முடிவதில்லை லஞ்சம் கொடுப்பவருக்கு மட்டுமே பணிசெய்யும் இவர் மீது துறை ரீதியான விசாரணை நடத்தி சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று பொது மக்கள் குமுறுகின்றனர். ஆனால் இவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

என்றும் இவர்கள் மீதும் உடனடியாக கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இல்லாவிட்டால் புதிதாக வரும் வட்டாட்சியருக்கும் நெளிவு சுழிவுகளை எடுத்துக்கூறி அவருக்கு புரோக்கர்கள் போல செயல்பட்டு சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மீண்டும் லஞ்சம் தலைதூக்க செய்துவிடுவார்கள்

லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் சிக்கிய ஆதாரங்கள் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை

சோழிங்கநல்லூர் தாலுகா அலுவலகத்தில் ஜூலை 17 அன்று நடத்தப்பட்ட அதிரடி சோதனையில், மூத்த வருவாய் ஆய்வாளர் மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோரது கணக்குகளை ஆய்வு செய்ததில், கடந்த ஜனவரி 1 முதல் ஜூன் 29 வரை பல்வேறு நபர்களிடமிருந்து ரூ. 16.42 லட்சம் ஜி-பே வழியாக லஞ்சமாகப் பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. 'என்னிடம் டெபிட், கிரெடிட் கார்டுகளோ அல்லது டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை செயலிகளோ இல்லை' என வட்டாட்சியர் இலக்கியா மறுத்தார். ஆனால், அவரது மொபைல் போனை ஆய்வு செய்தபோது, உதவி வருவாய் ஆய்வாளருக்கு 'அங்கிள், நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அலுவலக ஊழியர்களிடம் பணம் உள்ளது' என்று லஞ்ச ஒழிப்புச் சோதனை குறித்து அவர் அனுப்பிய ரகசியக் குறுஞ்செய்தி ஆதாரமாகச் சிக்கியது

இதைத் தொடர்ந்து வட்டாட்சியர் அலுவலகத்தில் கணக்கில் வராத ரொக்கப் பணம் ரூ.36,000 பறிமுதல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை ஆதம்பாக்கத்தில் உள்ள இலக்கியாவின் இல்லத்திலும் சோதனை நடத்தப்பட்டு முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதன் அடிப்படையில் வட்டாட்சியர் இலக்கியா உட்பட ஐந்து பேர் மீது லஞ்ச ஒழிப்புப் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்

சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அலுவலக ஊழல் விவகாரத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை (DVAC) பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை (FIR) மற்றும் அந்த அலுவலகத்தின் தற்போதைய கள நிலவரம் குறித்த விரிவான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆலந்தூர் லஞ்ச ஒழிப்புத் துறை **Vigilance** - முகப்பு போலீசாரால் ஊழல் தடுப்புச் சட்டத்தின் (**Prevention of Corruption Act**) கீழ் அதிகாரப்பூர்வமாக **FIR** பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கில் முன்னாள் வட்டாட்சியர் இலக்கியா முதல் குற்றவாளியாக (A1) சேர்க்கப்பட்டு உள்ளார். இவருடன் சேர்த்து லஞ்சப் பணத்தை டிஜிட்டல் முறையில் வசூலித்த மூத்த வருவாய் ஆய்வாளர், பதிவறை எழுத்தர் மற்றும் இடைத்தரகர்கள் என மொத்தம் 5 பேர் மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

குற்றவாளிகளின் வங்கிக் கணக்கு விவரங்கள், ஜி-பே (**GPay**) பரிவர்த்தனை வரலாறு மற்றும் இலக்கியாவின் மொபைலில் இருந்து மீட்கப்பட்ட ரகசியக் குறுஞ்செய்திகள் (**SMS**) ஆகியவை நீதிமன்றத்தில் முக்கிய ஆவணச் சான்றுகளாக (**Primary Evidence**) சமர்ப்பிக்கப்பட்டு உள்ளன


இந்த அளவுக்கு லஞ்ச ஊழலில் திளைத்த வட்டாட்சியர் இலக்கியா அவர்களை டிஸ்மிஸ் செய்யாமல், வெரும் பணியிட மாறுதல் என்ற கண்துடைப்பு நடவடிக்கை மட்டுமே எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு லஞ்ச ஊழலில் உறுதுணையாக இருந்து பணம் வாங்கிக் கொடுத்த மற்ற முக்கிய பணியாளர்களான துணை வட்டாட்சியர் சபரீசன், டிரைவர் தேவா, நில அளவை பிரிவு வட்ட துணை ஆய்வாளர் சுஹைல் ஆகியோர் மீதும் சஸ்பெண்ட் அல்லது டிஸ்மிஸ் உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர். முந்தைய ஆட்சியாளர்களை போல் இல்லாமல், அரசு பணத்தை தொட மாட்டேன், தொட்டவர்களை விடமாட்டேன் என்று கூறும் முதல்வர் ஜோசப் விஜய் யின் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை பொருத்திருந்து பார்ப்போம்



பதக்கம் பெற்ற அதிகாரிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்,

ஜனாதிபதி மற்றும் முதலமைச்சர் காவல் பதக்கங்களை பெற்ற நாகப்பட்டினம் மாவட்ட காவல் அதிகாரிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். பதக்கம் பெற்ற அதிகாரிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பாராட்டி, வாழ்த்துகளை தெரிவித்தார்.

சட்டப்பேரவை விவாதத்தில் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி எழுப்பிய கேள்விக்கு முதல்வர் விஜய் விளக்கத்துடன் பதில் அளித்தார்





தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி பேசுகையில், கர்நாடகா செல்ல முதல்வர் விஜய் முடிவெடுத்தது ஏன் என்று கேள்வி எழுப்பினார்

இதற்கு பதில் அளித்து முதல்வர் விஜய் பேசுகையில், காவிரி நமக்கு உயிர் ஆதாரம். காவிரி விவகாரத்தை வைத்து அரசியல் செய்யும் எண்ணம் துளி கூட தங்களுக்கு இல்லை. மேகேதாட்டு விவகாரத்தில் நாம் சேர்ந்து கொண்டுவந்த தீர்மானத்தை பிரமரிடம் நேர்முக கடிதமாக அளித்துள்ளோம். அதோடு அப்படியே இருந்துவிட வில்லை. மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் மேகேதாட்டு அணை பற்றி முழுவிவரங்களை குறிப்பிடவில்லை என தெரிந்ததும், காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் விவரங்களை குறிப்பிட்டு அடுத்த நாளே பிரதமருக்கு கடிதம் எழுதினோம்

எனவே காவிரி நதிநீர், மேகேதாட்டு விவகாரத்தில் தமிழக அரசின் உரிமையை நாம் விட்டுத்தர மாட்டோம். கர்நாடகாவில் சில அணைகள் கட்ட ஆரம்பித்தபோது இதே அவையில் 1969 ஆம் ஆண்டு விவாதம் நடந்துள்ளது. அப்போது நீர்வளத்துறை அமைச்சராக இருந்தது யார்? அப்போது அணை கட்ட விட்டது ஏன் என்று கேட்டு மலிவான அரசியல் செய்ய விரும்பவில்லை. காவிரி விவகாரத்தை மிக கவனமாக கையாள வேண்டும்

சட்டப்படி இந்த விவகாரத்தை அணுகுவதில் உறுதியாக உள்ளோம். இருந்தாலும் ஒரு முயற்சி எடுப்போம் என நினைத்துதான் பெங்களூரு செல்ல முடிவெடுத்தேன். அந்த பயணம் பற்றி யோசித்து கேட்டது நான் தான். நான் கர்நாடக செல்ல முயற்சித்ததற்கு காரணம், இப்போது பகை நாடுகளே பிரச்சினைகளை பேசித்தீர்க்க பார்க்கிறார்கள். அப்படி இருக்கையில், பக்கத்து மாநிலத்தோடு பேசிப் பார்த்தால் என்ன என்று இந்த முடிவை எடுத்தேன். இதில் ஒருவேளை ஏதேனும் அவமானம் நேர்ந்தால், தமிழக மக்களுக்காக அதையும் தாங்க தயாராக இருக்கிறேன் என்று சொன்னேன்

குறுவை சாகுபடிக்கு நிவாரண தொகுப்பு ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். அரசியலே நாங்கள் தான் என சொல்லிக் கொள்பவர்களுக்கு இது எப்படி தெரியாமல் போனது எனத் தெரியவில்லை. பேப்பர் படித்திருந்தால் இது தெரிந்திருக்கும் என்று கூறினார்.

அண்ணன் சீர், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், வெற்றி 150, வெற்றி வீடு, நீர் வளம், ஆறுகள், உள்கட்டமைப்பு என அனைவரையும் அரவணைத்த முதல்வர் விஜய் அரசின் முதல் வெற்றி பட்ஜெட்



முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் அரசின் முதல் பட்ஜெட்டை நிதி அமைச்சர் மரிய வில்சன் தமிழக சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்

அப்போது நிதி அமைச்சர் பேசுகையில், அரசு அறம், பொருள், இன்பத்தை நோக்கமாக வைத்து 10 தூண்களைக் கொண்ட வெற்றித் தமிழகம் தொலைநோக்கு திட்ட ஆவணத்தை அரசு வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் திட்டங்களை அடுத்து வருகிற முதலாம், மூன்றாம், ஐந்தாம் ஆண்டுக்குள் நிறைவேற்றத்தக்க திட்டங்களை வகைப்படுத்தி, அவற்றுக்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறது என்றார்.

தமிழக பட்ஜெட் முக்கிய அம்சங்கள்:

அனைத்து மாநகராட்சிகளிலும் வீதிகள் மேம்பாடு செய்யப்படும். சாலை இணைப்பு, நடைபாதை, மிதிவண்டிப் பாதை, சீரான குறுக்கு வீதி இணைப்புகள் , நவீன எல்.ஈ.டி. தெரு விளக்குகள், பள்ளிகளுக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கான பாதைகள் உறுதி செய்யப்படும்

கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 'வெற்றி 150' அறிமுகம். 125 நாட்கள் வேலை முடித்த குடும்பங்களுக்கு கூடுதலாக 25 நாட்கள் வேலை வழங்க உறுதி செய்யப்படும். மொத்தம் 150 நாட்கள் வேலைவாய்ப்பு உறுதி செய்ய ஆண்டுதோறும் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

நீர்வளத் துறைக்கு 9,264 கோடி ரூபாய் ஒதுக்கீடு. தமிழ்நாட்டின் நீர் உரிமையை அரசு உறுதி செய்யும். தமிழ்நாட்டிற்கு உரிய உரிமைகளை நதிநீர்ப் பங்கீட்டில் தொடர்ந்து பாதுகாக்கும். மேகேதாட்டு உள்ளிட்ட உரிமை பாதிக்கும்



திட்டங்களுக்கு உறுதியான எதிர்ப்பு தெரிவிக்கப்படும். முல்லைப் பெரியாறு, ஆனைமலையாறு நல்லாறு திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கோதாவரி – காவிரி நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த வலியுறுத்தப்படும்

காவிரி – வைகை – குண்டாறு நதி இணைப்புத் திட்டத்திற்கு ரூ. 150 கோடி நிதி ஒதுக்கீடு. பெண்ணையாறு–செய்யாறு, பெண்ணையாறு–பாலாறு மற்றும் தாமிரபரணி வைப்பாறு திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்ய ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு. காவிரி டெல்டா சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு மற்றும் டெல்டா பகுதியின் நீண்டகால சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறைக்கு 1,762 கோடி ரூபாய் ஒதுக்கீடு

புதிய மாநில வீட்டுவசதித் திட்டமான வெற்றி வீடு திட்டம் அறிமுகம். வீட்டு அலகுத் தொகை ரூ.3.10 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்வு. முதல் ஆண்டிலேயே 70,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படும். ரூ.3,500 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்

மகளிர் சுயஉதவிக் குழுக்களை குறுந்தொழில் நிறுவனங்களாக மேம்படுத்தும் புதிய திட்டம் சிங்கப்பெண்கள் வலிமைப்படுத்தும் திட்டம் அறிமுகம். இந்த ஆண்டில் ரூ.38,000 கோடி கடன் வழங்க இலக்கு. தொழில்முனைவோரின் செயல்திறனை வெளிப்படுத்தும் சுயஉதவிக் குழு நிறுவனங்களுக்கு ரூ.5 லட்சம் முதலீட்டு மானியம் வழங்கப்படும்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 39,609 கோடி ரூபாய் ஒதுக்கீடு

சென்னை பிராட்வேயில் 160 நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க ரூ.1,375 கோடி ஒதுக்கீடு. நீதி நிர்வாகத் துறைக்கு ரூ.2486 கோடி ஒதுக்கீடு

டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நெல் சாகுபடியினை ஊக்குவிக்க குறுவைத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்த ரூ. 5.134 கோடி ஒதுக்கீடு. வேளாண் மற்றும் உழவர் நலத் துறைக்கு 14,984 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

அனைத்து இ-சேவை மையங்களும் 'இ-சேவை 2.0' ஆக மேம்படுத்தப்படும். அதிவேக இணையம் கூடுதல் மக்கள்நல சேவைகள். நம்ம அரசு **WhatsApp Chatbot** சேவைகள் 76-இல் இருந்து 275 ஆக விரிவாக்கம் செய்யப்படும்

ரூ. 1,543 கோடி முதலீட்டில் 178 புதிய துணை மின்நிலையங்கள் உருவாக்கப்படும். ரூ.2,000 கோடியில் 40,000 பழைய மின்மாற்றிகள் மாற்றம் செய்யப்படும்

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும், குழந்தையின் பிறப்பைக் கொண்டாடும் வகையிலும், தாய்மையின் இன்பத்தையும் முக்கியத்துவத்தையும் போற்றும் வகையிலும், தாய்மாமனின் அன்பளிப்பாக 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இதற்காக ரூ.560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது

அண்ணனின் சீர்: பெண்களின் திருமண நன்னாளில் 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும். இதற்காக ரூ.812 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அயோத்திதாசப் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் கீழ் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் வாழ்க்கைத் தரம் உயர்வை உறுதி செய்ய ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், பெண்களுக்கு முன்னுரிமை வழங்க மண்ணின் மகள் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் முத்திரைத்தாள் வரி மற்றும் பதிவுக் கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்படும். விவசாயம் செய்திட நவீன தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். இதற்காக ரூ.5.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் பெண்களுக்காக வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் 5 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கப்படும் என்பது உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளது

காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய போலீஸ் அதிகாரிகளுக்கான அண்ணா பதக்கம் பெற்றார் பல்லடம் உளவுத்துறை காவல் உதவி ஆய்வாளர் மாரிமுத்து. பல்வேறு தரப்பினர் பாராட்டு



தமிழக காவல்துறையில் சிறப்பாக பணியாற்றும் போலீஸ் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான முதலமைச்சர் பதக்கம் பெறுபவர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டிருந்தது

இதில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்பட காவல்துறையில் பாராட்டுக்குறிய வகையில் பணியாற்றிய காவலர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்பு படை மற்றும் தடய அறிவியல் துறை உள்ளிட்ட 600 பேர்களுக்கு தமிழக முதலமைச்சர் விஜய் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பதக்கங்களை வழங்கினார்

இந்த நிகழ்வில் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பாக பணியாற்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கம் விருது திருப்பூர் மாவட்ட பல்லடம் உளவுத்துறை காவல் உதவி ஆய்வாளர் மாரிமுத்து என்பவருக்கு தமிழக முதல்அமைச்சர் ச.ஜோசப் விஜய் வழங்கினார்.

இவருக்கு பல்லடம் பகுதி அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் காவல்துறை, அரசு துறை அதிகாரிகள், பணியாளர்கள், பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்ட நட்பு வட்டத்தினர் சார்பில் இந்த உயரிய சாதனை, பல்லடம் காவல் உட்கோட்டத்திற்கே பெருமை சேர்த்துள்ளது என்றும் மேலும் பல உயரிய விருதுகளையும், சிறப்புகளையும் பெற்று காவல்துறைக்கும், நமது சமூகத்திற்கும் தொடர்ந்து சிறப்பான சேவையாற்ற வேண்டும் என்றும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்

த.வெ.க மாநில செய்தி தொடர்பாளராக நடிகர் சௌந்தரராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.





தமிழக வெற்றிக் கழகம் மாநில செய்தி தொடர்பாளராக நடிகர் சௌந்தரராஜா நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் ஊடகம் மற்றும் செய்தி தொடர்பு பிரிவை வலுப்படுத்தும் நோக்கில் கட்சியின் தலைவர் முதல்வர் விஜய் உத்தரவின் பேரில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து நடிகர் சௌந்தர்ராஜா நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவில், இந்த மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பொறுப்பு எனக்குக் கிடைத்திருப்பது தனிப்பட்ட அங்கீகாரமாக அல்ல; மக்கள் பணியை மேலும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பாகவே நான் கருதுகிறேன். என் மீது தொடர்ந்து அன்பும் நம்பிக்கையும் வைத்து வாழ்த்தி, ஊக்கமளித்து, உறுதுணையாக நிற்கும் அனைத்து உறவுகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இந்த அங்கீகாரத்திற்காக நம் தலைமைக்கும், என்னை நம்பி ஆதரவு அளித்து வரும் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கான சேவையே என் பயணம். உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் எனது மிகப்பெரிய பலம். அண்ணனுக்கு நீதியின் நுண்ணறிவு குழுமத்தின் சார்பாக வாழ்த்துக்கள்.

மும்முனை இலவச மின்சாரத்திற்கு ரூ.7,432 கோடி, மண் வளம் பாதுகாக்க திட்டம், வெற்றி இல்லதரசி வீட்டு தோட்டம், அஞ்சலை அம்மாள், அண்ணல் அம்பேத்கர், நம்மாழ்வார் பெயரில் திட்டங்கள். பல்வேறு அதிரடி அறிவிப்புகளுடன் வெளிவந்த முதல்வர் விஜய் அரசின் முதல் வேளாண் பட்ஜெட்



தமிழ்நாடு சட்டப்பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார்

தமிழ்நாடு பொது பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு ரூ.14,984 கோடி ஒதுக்கப்பட்டது. வேளாண் பட்ஜெட்டில் பல்வேறு முக்கிய அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது

மண்ணின் வளத்தை பாதுகாக்க 'தமிழ்நாடு மண்வளப் பாதுகாப்பு இயக்கம் – வளமான மண்; வளமான வருங்காலம்! திட்டத்திற்கு ரூ.122.51 கோடி ஒதுக்கீடு. விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்துக்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நஞ்சற்ற உற்பத்தி மற்றும் உலகளாவிய ஏற்றுமதிக்காக ரூ.8.42 கோடி நிதி ஒதுக்கீடு. தென்னை சிறப்பு திட்டத்திற்காக ரூ.41 கோடி நிதி ஒதுக்கீடு. வெற்றி இல்லதரசி வீட்டு தோட்டம் திட்டத்தில் மாடித்தோட்டம் அமைக்க இடுபொருள் தொகுப்புகள், காய்கறி விதை தொகுப்புகள், பழச்செடி தொகுப்புகள், நீரியல் தோட்டம். செங்குத்து தோட்டம், நிழல்வலை குடில்கள் அமைக்க ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு.

தமிழ்நாடு தளிர் கீரைகள் திட்டத்திற்காக ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீடு. தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளுக்கு ரூ.41 கோடி நிதி ஒதுக்கீடு. இதன்மூலம் சாமந்தி சாகுபடியை ஒளியூட்டி ஊக்குவித்தல், பழ உறைகள், குலை உறைகள், பசுமைக்குடில், நிழல்வலை குடில், நிரந்தர பந்தல் அமைத்தல், வாழை விழாமல் இருக்க முட்டு கொடுத்தல் உள்ளிட்ட திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டது.

அஞ்சலை அம்மாள் பெயரில் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கப்படும். திரவ உயிர் உர உற்பத்தி மையங்களின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.3.56 கோடி நிதி ஒதுக்கீடு. 17,315 ஏக்கர் விதைக்கரும்பு மானியம் வழங்க ரூ.9.36 கோடி நிதி ஒதுக்கீடு. பனை விதைகள், பனங்கன்றுகள் விநியோகம், பயிற்சி மற்றும் பனை பொருள் உற்பத்தி கூடாரங்கள் அமைப்பதற்காக ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2026-27 ஆம் ஆண்டில் 131 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்திக்கு இலக்கு நிர்ணயம். மண்வள பாதுகாப்பு இயக்கத்துக்கு ரூ.122.51 கோடி நிதி ஒதுக்கீடு. ஒவ்வொரு ஆண்டும் 5 விவசாயிகளுக்கு சிறந்த உயிர்ம விவசாயிக்கான நம்மாழ்வார் விருது வழங்கப்படும். இந்த திட்டத்துக்காக ரூ.11 லட்சம் நிதி ஒதுக்கீடு. மூன்று புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். இதற்காக ரூ.7.1 கோடி நிதி ஒதுக்கீடு. கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காக கரும்பு சாகுபடி மேம்பாட்டு திட்டத்திற்காக ரூ.9 கோடி நிதி ஒதுக்கீடு.

தமிழ்நாடு மண்வளம் பாதுகாப்பு இயக்கம் அறிமுகம் செய்யப்படும். உழவர் அடையாள அட்டை பெற்ற 3 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.6 கோடியில் மண்வள அட்டை வழங்கப்படும். புதிய இயற்கை வேளாண் தொகுப்பை உருவாக்க ரூ.9 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்துக்கு மாநில அரசின் சிறப்பு திட்டத்துக்கு ரூ.34.72 கோடி நிதி ஒதுக்கீடு. உழவர் செய்யறிவு திட்டம் (ஏஐ) செயல்படுத்த ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு. சாமை, திணை, வரகு உள்ளிட்ட தமிழ்நாடு குறுதானிய இயக்கம் தொடங்கப்படும். இதற்காக ரூ.7.61 கோடி நிதி ஒதுக்கீடு.

மக்காச்சோளம் உற்பத்தியை அதிகரிக்க ரூ.36 கோடி நிதி ஒதுக்கீடு. பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்களில் தன்னிறைவு இயக்கத்திற்காக ரூ.203.64 கோடி நிதி ஒதுக்கீடு. பருத்தி மறுமலர்ச்சி இயக்கத்திற்காக ரூ.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள், உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் 20 சதவீதம் வரை கூடுதல் மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மின்மோட்டார் சூரிய சக்தி பம்புசெட்டுகள் 300 ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படும். இந்த திட்டத்துக்காக ரூ.56.72 கோடி நிதி ஒதுக்கீடு. விவசாய நிலங்களில் நிரந்தர பசுமைக்கு வேளாண் காடுகள் திட்டத்திற்காக ரூ.17.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது

தமிழ்நாட்டில் 5 இடங்களில் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். நெல் விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியத்திற்கான மாநில அரசின் சிறப்புத் திட்டத்துக்கு ரூ34.72 கோடி ஒதுக்கீடு என்று வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது

1,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்!

தாம்பரம் மாநகர போக்குவரத்து காவல்துறை சார்பில், கௌரிவாக்கம் SIVET கல்லூரியில் 1,000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. சாலை விபத்துகளைத் தடுப்பது, போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிப்பது மற்றும் பாதுகாப்பான சாலைப் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு இந்நிகழ்ச்சி, போக்குவரத்து துணை ஆணையர் டாக்டர் K. பிரபாகர், IPS தலைமையில் நடைபெற்றது.

போக்குவரத்து விதிகளை கடைப்பிடிப்பதன் அவசியம் பாதுகாப்பான சாலைப் பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு பயிற்சி போக்குவரத்து துணை ஆணையர் டாக்டர் K.பிரபாகர், IPS மாணவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.





வட கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜி.எஸ். சமீரன் தலைமையில் ஆய்வு கூட்டம்



வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (05.08.2026) அன்று ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணை ஆணையாளர்கள் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ..ப, (சுகாதாரம்), திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (கல்வி), திரு.செ.சரவணன் (பணிகள்), துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச். ஆர். கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொலைந்த தேடல்கள்



சிறுவனாய் இருந்த என்னை தேடினேன்
இளமையில் துள்ளிய தேகத்தை தேடினேன்
வறுமையில் உழன்ற காலத்தை தேடினேன்
விளைந்த நிலங்களில் உழைத்ததை தேடினேன்

படித்த கல்லூரியின் புத்தகத்தை தேடினேன்
பாசத்தை உலுக்கிய காதலை தேடினேன்
கைப்பிடித்த மனைவியின் மணக்கோலத்தை தேடினேன்
கரங்களை பற்றிய குழந்தைகளை தேடினேன்

குடும்பத்தின் சுமைகளை சுமக்க தேடினேன்
கொடுத்த கஷ்டங்களை திரும்பவும் தேடினேன்
முதுமையின் வாசலில் அமைதியை தேடினேன்
மூச்சிரைக்கும் மனைவியோடு ஆசையை தேடினேன்

தேடிப்போகும் எல்லாம் ஓடிப்போன மாயம்
தேவைகள் முடிந்தது தேடியவர்க்கும் வாழ்வேமாயம்

சி.சுபாஷ் சந்திர போஸ்
(காவல்துணை கண்காணிப்பாளர் ஓய்வு)

Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

Our Principles & Products

SIEMENS azbil TURCK



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID



Temperature Controller, Recorders, Switch, Sensors



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement



Our Service



Power



Water &Waste water




Metro



SPM



Cement



Metal



Smart World

Our Clients

Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Arnat Nagar, Tambaram
Chennai-
600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd

நீண்ட நாள் கிடப்பில் இருந்த தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மன்னார்குடி பட்டுக்கோட்டை புதிய அகல ரயில் பாதை திட்டத்திற்கு நிலம் எடுக்க அரசாணை வெளியீடு



தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை, புதிய அகல ரயில் பாதை அமைக்கும் திட்டத்துக்கு, நிலம் கையகப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

தமிழகத்தில், மன்னார்குடி – பட்டுக்கோட்டை 41 கி.மீ., தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை 52 கி.மீ., தூரத்திற்கு புதிய பாதை திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல் நடைபெறாமல் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது

தற்பொழுது மன்னார்குடி – பட்டுக்கோட்டை புதிய ரயில் பாதை திட்டத்துக்கும், தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை புதிய ரயில் பாதை திட்டத்துக்கும் நிலம் கையகப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது

தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை, புதிய அகல ரயில் பாதை அமைக்கும் திட்டத்துக்கு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம் மற்றும் பட்டுக்கோட்டை தாலுகாக்களில் உள்ள புளியந்தோப்பு உட்பட, 25 கிராமங்களில் நிலம் கையகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டு உள்ளது

இதற்காக மொத்தம் 294 ஏக்கர் பட்டா நிலங்களும், 78 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களும் ஒதுக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது

நிலம் கையகப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள, 13 சிறப்பு பணியிடங்கள் உருவாக்கவும், தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் கையகப்படுத்தும் அலுவலராக நியமிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது என்றும் தமிழ்நாடு போக்குவரத்து துறை அறிவித்து உள்ளது



மதுக்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் அடையாளம் தெரியாத இளம்பெண் கொலை வழக்கு – 11 நாட்களுக்குள் கணவரை கைது செய்து குற்றத்தை கண்டுபிடித்த கோவை மாவட்ட காவல்துறை



கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பவன் குமார், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில், பேரூர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. சுரேஷ் அவர்களின் மேற்பார்வையிலும், மதுக்கரை காவல் நிலைய ஆய்வாளர் திரு. ராஜேந்திர பிரசாத் தலைமையிலும், உதவி ஆய்வாளர் திரு. பாண்டியராஜ் மற்றும் தனிப்படை காவலர்கள் அடங்கிய சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, அடையாளம் தெரியாத இளம்பெண் கொலை வழக்கு தீவிரமாக விசாரிக்கப்பட்டது.

கடந்த 24.06.2026 அன்று காலை சுமார் 10.25 மணியளவில், கோவைப்புதூர் மஞ்சப்பள்ளம் பகுதியில் உள்ள புதருக்குள், சுமார் 25 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத இளம்பெண் ஒருவர் நிர்வாண நிலையில் அழுகிய சடலமாக கிடந்தார். இதுகுறித்து மதுக்கரை கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை உடனடியாக தொடங்கப்பட்டது.

வழக்கின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, தனிப்படை விசாரணைக் குழுவினர் 5,000-க்கும் மேற்பட்ட அழைப்பு விவரப் பதிவுகள் (CDR), 200-க்கும் மேற்பட்ட CCTV காட்சிகள், சம்பவ இடத்தைச் சுற்றியுள்ள செல்போன் டவர் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்தனர். உயிரிழந்த பெண்ணின் கையில் Jagan என்ற பெயர் பச்சைக் குத்தப்பட்டிருந்தது முக்கிய துப்பாக அமைந்தது. இந்தத் தகவலை அறிவியல் ஆதாரங்கள், தொழில்நுட்ப ஆய்வு, சைபர் உதவி மற்றும் தொடர் புலனாய்வுடன் இணைத்து, உயிரிழந்தவர் மற்றும் குற்றவாளி இருவரும் அடையாளம் காணப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட குற்றவாளி: ஜெகனா பிரதான் (23), த/பெ சிவா பிரதான், லங்கேஸ்வரி சாஹி, பருடா, சத்ராபூர் நகரம், ஒடிசா. உயிரிழந்தவர் பர்ஷா(21), கஜபதி மாவட்டம், ஒடிசா. விசாரணையில், இருவரும் Instagram மூலம் பழகி பின்னர் திருமணம் செய்து கொண்டதும், கட்டுமானத் தொழிலில் வேலை செய்வதற்காக தமிழ்நாட்டிற்கு வந்ததும் தெரியவந்தது. கணவன்-மனைவி இடையே அடிக்கடி ஏற்பட்ட குடும்பத் தகராறின் காரணமாக, மஞ்சப்பள்ளம் அருகே தனது மனைவியை குற்றவாளி கொலை செய்தது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது.

அறிவியல் ஆதாரங்கள் மற்றும் தொடர் விசாரணையின் அடிப்படையில், குற்றவாளியை காவல்துறையினர் கண்டறிந்து கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலில் கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்த கொலை வழக்கை 11 நாட்களுக்குள் திறம்பட கண்டுபிடித்த தனிப்படையினர் அவர்களின் பணியை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பவன் குமார், இ.கா.ப., அவர்கள் பாராட்டினார்.

பணிமனை கட்டிடத்தை தஞ்சை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்தார்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலிகாட்சி வாயிலாக உயர்கல்வித்துறை தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் ரெகுநாதபுரம் அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் ரூபாய் 6.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமணைக் கட்டடத்தை (04.08.2026) அன்று திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.ரேவதி இ.ஆ.ப அவர்கள் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்கள். கல்லூரி முதல்வர் திருமதி.உமாதேவி அவர்கள் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



பதவி உயர்வு, இடமாறுதலுக்கும் இனி முதல்வர் ஒப்புதல் தேவை!



சென்னை: அரசு அதிகாரிகள் பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக, முதல்வர் விஜயின் அனுமதியை இனி பெற வேண்டும். லஞ்சம், ஊழல் முறைகேடுகளை தடுக்கும் வகையில், ஏற்கனவே உள்ள நடைமுறையை மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 41 அரசு துறைகள் உள்ளன. இவற்றின் வாயிலாக மக்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகள், சாலைகள், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீர்நிலைகள் மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அரசு கட்டடங்கள் கட்டுமானம் உள்ளிட்ட பணிகளும் நடக்கின்றன. ஒப்பந்ததாரர்கள் வாயிலாக இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முந்தைய தி.மு.க., - அ.தி.மு.க., ஆட்சிகளில், இப்பணிகளுக்கு கமிஷன் பெறப்பட்டது. சொந்த அலுவல் தொடர்பாக, அதிகாரிகளை அணுகும் பொது மக்களிடமும் லஞ்சம் பெறப்பட்டது. இந்த கமிஷன் தொகை, முக்கிய அரசியல்வாதிகள் முதல், அடிமட்ட அதிகாரிகள் வரை பங்கு பிரித்துக் கொள்ளப்பட்டது. இதற்காக, அதிக தொகைக்கு பணிகள் நடக்கும் பகுதிகளில் வேலை பார்ப்பதற்கு, அதிகாரிகள் பலரும் ஆர்வம் காட்டினர்; பணம் கொடுத்து முக்கிய பதவிகளை அதிகாரிகள் கைப்பற்றினர். நேர்மையான அதிகாரிகள், 'டம்மி'யான பதவிகளுக்கு தூக்கியடிக்கப்பட்டனர்.

த.வெ.க., அரசு பொறுப்பேற்ற நிலையில், சில துறைகளில் இது போன்று அதிகாரிகள் பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வுக்கு லஞ்சம் பெறும் நடவடிக்கை தொடர்ந்தது. இந்த விவகாரம், முதல்வர் விஜய் கவனத்திற்கு சென்றது. இதையடுத்து, ஏற்கனவே இருந்த நடைமுறை மாற்றப்பட்டு, பதவி உயர்வு, பணியிட மாற்றங்களுக்கு, இனி முதல்வர் ஒப்புதல் பெற வேண்டும் என, தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டு உள்ளதாவது: தமிழகத்தில் உள்ள அனைத்து துறை செயலர்கள், தலைவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கூடுதல், இணை, துணை செயலர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் பதிவாளர்கள், கூடுதல் இயக்குநர்கள் உள்ளிட்டோரின் பதவி உயர்வு பட்டியல்கள், முதல்வர் அலுவலகத்திற்கு அனுப்பி, இனி ஒப்புதல் பெறப்பட வேண்டும். மற்ற பணியாளர்கள் பதவி உயர்வு பட்டியல்களுக்கு, தொடர்புடைய அமைச்சரின் ஒப்புதல் போதுமானதாகும். இதில் ஏதும் குழப்பம் இருந்தால், மனிதவள மேலாண்மை துறை அமைச்சரின் ஒப்புதலுக்கு அவற்றை அனுப்ப வேண்டும். அவரது பரிசீலனைக்கு பின், இதில் முடிவெடுக்கப்படும்.

பணிமூப்பு அடிப்படையை மீறிய பதவி உயர்வுகள் தொடர்பான கோப்புகளை, தலைமை செயலர் பரிந்துரை பெற்ற பிறகே, துறை செயலர்கள், முதல்வரின் ஒப்புதலுக்கு இனி அனுப்பி வைக்க முடியும். அரசு தலைமை வழக்கறிஞர், கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர், அரசு பிளீடர் உள்ளிட்ட உயர்நிலை பதவிகளுக்கான நியமனங்களுக்கு, முதல்வர் ஒப்புதல் கட்டாயம். நீதிமன்றம் தொடர்பான மற்ற சட்ட அலுவலர்களின் நியமனங்களை, சட்டத்துறை அமைச்சர் முடிவுக்கு அனுப்ப வேண்டும்.

நீர்வளத் துறையில் கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் பணியிட மாற்றம் தொடர்பான பணிகளை, துறையின் அமைச்சர் மேற்கொள்வார். பொதுப்பணி துறை தொடர்பான பணியிட மாறுதல் மற்றும் பதவி உயர்வுக்கு. துறையின் அமைச்சரின் ஒப்புதல் கட்டாயம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மனிதவள மேலாண்மை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'அனைத்து துறைகளுக்கும் இதே போன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. 'இதன் வாயிலாக, இனி பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதலுக்கு லஞ்சம் பெறுவது கட்டுப்படுத்தப்படும். முதல்வர் விஜய் எதிர்பார்ப்பது போல, ஊழலற்ற அரசாங்கத்தை நடத்தும் சூழல் உருவாகும் என்றார்.



கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு முறை கண்காணிப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம்



பட்டுக்கோட்டை உட்கோட்டம் கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு முறை கண்காணிப்பு குழு தலைவரும் வருவாய் கோட்டாட்சியர் தலைவர் திரு மி கு . சங்கர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஜூலை 30 மனித கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வருவாய் அலுவலர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம் பேராவூரணி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.07.2026 அன்று மாலை 3:30 மணியளவில் நடைபெற்றது. தஞ்சாவூர் செட் இன்டியா சமூக சேவை நிறுவன திட்ட இயக்குனர் திரு.ஜெய் எடில்பர்ட் அனைவரையும் வரவேற்றார். வருவாய் வட்டாட்சியர் திரு.பாலசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் பட்டுக்கோட்டை தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் திரு.பி. பாலசந்தர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.நடராஜன் அவர்கள் கொத்தடிமை தொழில் முறை ஒழிப்புச் சட்டம் பற்றி கருத்துரை வழங்கினார். முகாமில் ஐஜேஎம் திருமிகு.சாரல் சாந்தினி தஞ்சாவூர் மாவட்ட கொத்தடிமை தொழிலாளர் கண்காணிப்புக்குழு உறுப்பினர் டாக்டர்.டி.புனல் ரவி ஆகியோர்கள் கருத்துரை வழங்கினார்கள். விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகி திருமிகு.சத்தியபிரியா கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்டதும் தற்போதைய நிலை பற்றி கூறினார். ஜூன் மாதம் கொத்தடிமையாக இருந்து மீட்கப்பட்ட பெருமகளூர் திரு. அய்யாசாமி, திரு.சுப்ரமணியன், பெத்தநாச்சிவயல் திரு.தங்கராசு, திருமதி. ஆதியம்மாள் ஆகியோர்கள் முகாமில் கலந்து கொண்டு தங்களுடைய கோரிக்கையினை முன் வைத்தனர். முகாமில் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் செட் இன்டியா திட்ட உதவியாளர் திரு.அருண் நன்றி கூறினார்.

புதுக்கோட்டை காவல் துறையினரின் தீவிர நடை ரோந்து



புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ரவீந்திர குமார் குப்தா இ.கா.ப., அவர்கள் அறிவுறுத்தலின்படி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 06.08.2026-ம் அன்று தேதி தீவிர நடை ரோந்து (FOOT PATROL) புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து உட்கோட்டங்களிலும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் ஈடுபடுத்தப்பட்டு பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில் தீவிர நடை ரோந்து மேற்கொள்ளப்பட்டது.

காவலாளி மாத சம்பளத்தில் ரூ.10 ஆயிரம் லஞ்சம் பெண் பிடிஓ கைது

ஈரோடு தாலுகா அலுவலக வளாகத்தில் ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தில் பிடிஓவாக பவானி மைலம்பாடியை சேர்ந்த லதா (55) என்பவர் பணியாற்றி வருகிறார். அதே ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்த இரவு நேர காவலாளியாக தினசரி ரூ.762 ஊதியத்தில் ஈரோடு கனிராவுத்தர்குளத்தை சேர்ந்த சண்முகசுந்தரம் (55) பணியாற்றி வருகிறார்.



பிடிஓ லதா, அவரது அலுவலகத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை மிரட்டி, மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை லஞ்சமாக வாங்கி வந்ததாக கூறப்படுகிறது. அவ்வாறு லஞ்சம் தராதவர்களை வேலையை விட்டு நீக்கி விடுவதாக மிரட்டல் விடுத்து வந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த நிலையில், சண்முகசுந்தரத்திடமும், மாத சம்பளத்தில் ஒரு பங்கினை லஞ்சமாக அதாவது ரூ.10 ஆயிரத்தை தருமாறு பிடிஓ லதா கேட்டுள்ளார்.

லஞ்சம் கொடுக்க விரும்பாத அவர் ஈரோடு மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசில் புகார் அளித்தார். இதையடுத்து லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார் வழங்கிய ரசாயனம் தடவிய ரூ.10 ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை நேற்று பிடிஓ லதாவிடம், சண்முகசுந்தரம் கொடுத்தபோது, மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார், பிடிஓவை கைது செய்தனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மருந்தக உரிமையாளர்கள் மற்றும் கூரியர் நிறுவன ஒப்பந்ததாரர்கள் கலந்துகொண்ட போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம்



திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 'திருமதி. சிரிரிவ்ஷ்டி சிங். இ.கா.ப.,' அவர்கள் தலைமையில் போதை நோக்கில் மருந்து மாத்திரைகள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதில் மருந்தகங்கள் மற்றும் கூரியர் நிறுவனங்கள் காவல்துறையின் முக்கிய பங்குதாரர்கள் என்பதை உணர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்க மாவட்டம் முழுவதும் உள்ள மருந்தக உரிமையாளர்கள் மற்றும் கூரியர் நிறுவனம் ஒப்பந்ததாரர்கள் ஆகியோர் அடங்கிய விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் போதை ஒழிப்பு நடைமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும் போதை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

போலி விளம்பரங்கள் மூலம் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட இரண்டு குற்றவாளிகளுக்கு சிறை தண்டனை



முகநூலில் போலி விளம்பரங்கள் மூலம் வேலை வாங்கி தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றவாளிகளான ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயநாதன் மற்றும் திருவாரூர் மாவட்டம், திருத்துரைப்பூண்டியைச் சேர்ந்த விவேக் ஆகியோர்களுக்கு 1 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.2000/- அபராதம் விதிக்கப்பட்டது.

பெரியநாயக்கன் பாளையம் காவல்துறையினரின் தீவிர வாகன சோதனையில் 2.250 கிலோ கஞ்சா பறிமுதல் – 3 பேர் கைது...



கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பவன் K.ரெட்டி,IPS., அவர்களின் உத்தரவின் பேரில், பெரியநாயக்கன்பாளையம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு.கனகசபாபதி அவர்களின் மேற்பார்வையில், பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.ராஜேஷ் கண்ணன் தலைமையில், உதவி ஆய்வாளர் திரு.நமச்சிவாயம் மற்றும் காவலர்கள் அருண்குமார், அருண், சதீஷ்குமார் ஆகியோர் (01.08.2026) அன்று குப்பேபாளையம் காளிபாளையம் சாலையில், கோமாளி அரங்கன் கோவில் அருகே தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, சந்தேகத்திற்கிடமான வகையில் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களை நிறுத்தி விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் அவர்கள்: நிலச்சல் ரௌத் (35), த/பெ. சுசாந்த்குமார் ரௌத், ஒரிசா மாநிலம், ஆனந்த் (22), த/பெ. கணேசன், திருப்பூர், உதயாஜெஸ்டின் (21), த/பெ. சுகேந்திரராஜன், திருப்பூர். என்பது தெரியவந்தது. மேலும், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சுமார் 2.250 கிலோ கிராம் கஞ்சா என்ற போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து, மூவரையும் கைது செய்து, அவர்களிடமிருந்து கஞ்சா மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுகுறித்து பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கோவை மாவட்ட காவல்துறை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் மாவட்டம் முழுவதும் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் சோதனைகளை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது பகுதியில் போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் ஏதேனும் தெரிந்தால் உடனடியாக காவல்துறைக்கு தெரிவித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் குறித்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க பொதுமக்கள், கோவை மாவட்ட காவல்துறையின் நிழல் (Nizhal) என்ற QR குறியீடு அடிப்படையிலான பாதுகாப்புத் தளத்தைப் பயன்படுத்தி, தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமல் ரகசியமாக தகவல்களை பகிரலாம். மேலும், கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை எண் 94981 81212 மற்றும் வாட்ஸ்அப் எண் 77081 00100 ஆகிய எண்களிலும் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கலாம். தகவல் அளிப்போரின் விவரங்கள் முழுமையாக ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH
LIQUID
SODEX
Fabric
Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaliyakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
மொத்தமே தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

A Journey of 15 Years

GEESYS

EB METERING PANEL



Your First Line of Electrical Safety

An EB Metering Panel isn't just a meter box-it ensures safe energy distribution, reliable metering, and compliance with electricity board standards.

SAFE & SECURE
Engineered for maximum electrical safety

ACCURATE METERING
Ensures precise energy measurement

COMPLIANCE ASSURED
Engineered for maximum electrical safety

BUILT TO LAST
High quality components for long-term reliability

KEY FEATURES

- TNEB / EB Approved Design
- Easy Installation & Maintenance
- CT Operated / Direct Connected Options
- High Quality Metering & Protection Devices
- Dust & Vermin Proof Enclosures
- Proper Cable Termination Space
- Clear Labelling & User Safety
- Custom Built as per Site Requirement

IDEAL FOR

Solar Power Plants | Industries | Commercial Buildings | Housing Projects | Infrastructure Projects

POWER YOU CAN TRUST. SAFETY YOU CAN RELY ON.

Follow us

Call Us
9962012354

Mail Us
Info@geesysindia.com

Learn more
www.geesysindia.com